# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.574/2023

சாட்சி : PW– 1
பெயர் : திரு. ஆனந்த் தேதி : 06.02.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( பிரதிவாதிகள் தரப்பில்)

நான் பி.இ படித்துள்ளேன். இவ்வழக்கை நான் வழக்கு சொத்தினை பொறுத்து கிரயம் செய்து கொடுக்கவேண்டுமென்று தாக்கல் செய்துள்ளேன். நான் ரூ.35 லட்சம் பணம் கொடுத்துள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன், நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1, 3 மற்றும் 8 பிரதிவாதிகள் பதிலறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பதிலறிவிப்பில் பிரதிவாதிகள் என்ன சொல்லியுள்ளார்கள் என்பது எனக்கு தெரியும். நான் பொய்யான விவரங்கள் கூறியுள்ளதாகவும், கிரய பாக்கி தொகை கொடுப்பதற்கு எனக்கு போதிய வசதியில்லை என்றும் தெரிவித்துள்ளார்கள். நான் ரூ.35 லட்சம் கொடுத்ததாக சொல்லும் சங்கதிகள் பொய்யானது என்றும் சொல்லியுள்ளார்கள் என்றால் சொல்லியுள்ளார்கள். ஆஜர் பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையிலும் இதே சங்கதிகளை சொல்லியுள்ளார்கள் என்றால் சொல்லியுள்ளார்கள். எனது வழக்கறிஞருக்கு கிடைக்கப்பெற்ற பதிலறிவிப்பிற்கு நான் மறுப்பு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு சொத்தினை கிரயம் செய்து கொள்வதற்கு நான் முன்பணமாக ரூ.35 லட்சம் கொடுத்தேன் என்பதற்கும், அவ்வாறு கொடுப்பதற்கு வசதி வாய்ப்பு இருந்தது என்பதற்கும் ஆவணங்கள்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் ரூ–35 லட்சம் வைத்திருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆஜர் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்து பார்த்துள்ளேன். பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள கண்ணன் என்பவர் என் உறவினர் ஆவார். மேற்படி கண்ணன் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்து செல்கிறார் என்றால் சரிதான். பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் சரியானவை அல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் பெருமாள் பெயரிலிருந்த கிரய பத்திரத்தின் நகலை கண்ணனிடம் கொடுத்திருந்தார் என்றும், அதனை கண்ணன் எனக்கு கொடுத்து நானும், கண்ணனும் சேர்ந்து இந்த வழக்கு ஒப்பந்த பத்திரத்தை போலியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஒப்பந்தபத்திரத்திற்கு ஆதரவாக மூல ஆவணத்தின் நகலை தான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ரூ.35 லட்சம் என்பது பெரிய தொகையாக உள்ள நிலையில் நகல் மூல ஆவணத்தை பெற்றுக்கொண்டு மேற்படி தொகையை நான் கொடுத்ததாக சொல்லும் சங்கதி நம்பக்கூடிய வகையில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1 ஒப்பந்த தேதியில் ஒப்பந்தம் எழுதுவதற்கு எவ்வளவு ரூபாய் முத்திரை தாள் பயன்படுத்தவேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ரூ.100 க்கு முத்திரை தாள் வாங்கவேண்டும். இவ்வழக்கு ஒப்பந்த பத்திரம் ரூ.50 மதிப்பு கொண்ட முத்திரை தாளில்தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே மேற்படி ஒப்பந்த பத்திரத்தை நிறைவேற்ற இயலாது என்றும், மேற்படி ஒப்பந்த பத்திரம் சட்டப்படி நிலைக்கக்கூடிய ஆவணம் அல்ல என்றும், ஏற்புடைய ஆவணம் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி முத்திரை தாள் யாரிடம் வாங்கப்பட்டது என்பது நினைவில் இல்லை. ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்ட தேதியில் வாங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்த பத்திரம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

வீரபாண்டியில் கணினி தட்டச்சு செய்யப்பட்டது. யாரிடம் செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை. மூல ஆவணத்தின் நகலை பத்திர எழுத்தரிடம் கொடுத்து கிரய தொகையை சொன்னால் அவர்களே ஒப்பந்தபத்திரத்தை தயார் செய்து கொடுக்கிறார்கள். மேற்படி ஒப்பந்த பத்திரம் யாரால் வரைவு செய்யப்பட்டது என்ற விவரம் வா.சா.ஆ–1 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணத்தின் 1ம் பக்கத்தில் முதல் 3 வரிகள் கருப்பு மையினால் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தம் செய்ததற்கு ஏற்பு செய்து சுருக்கொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என்ன சங்கதிகள் அடிக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. வா.சா.ஆ–1 ஆவணத்தை நான் போலியாக தயார் செய்த காரணததினால் அதில் பத்திர எழுத்தர் பெயர் மற்றும் முகவரி இல்லை என்றும், அடித்தலும், திருத்தலும் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து கண்ணனும் தகவல் சொன்னார், வேறு ஒரு நபரும் தகவல் சொன்னார். வழக்கு சொத்து எனது வீட்டிலிருந்து சுமார் 40 கி.மீ தொலைவில் உள்ளது. ஒப்பந்த தேதிக்கு முன்பாக வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் ஒப்பந்த தேதிக்கு ஆறு மாதத்திற்கு முன்பாக பார்த்தேன். வழக்கு சொத்தை பொறுத்து கண்ணன் கிரயம் செய்து கொள்வதாக முன்பணம் கொடுத்திருந்தாரா என்றால் அது எனக்கு தெரியாது.

பிரதிவாதிகளின் தரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem